# நான் அரசாள வேண்டுமானால், சண்டையிட்டாக வேண்டும், என் தைரியத்தை அதிகரியும், கர்த்தாவே



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்,**
ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ்,
அமெரிக்கா

38. இப்பொழுது, நீங்கள் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன், அவர் சொன்னார்,

**இப்பொழுது, நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு நான் சொல்லுவதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்.** (இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள்.)

**என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டு போவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன்.**

இப்பொழுது, உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா, தேவன், "பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசம் அங்கே உள்ளது, நான் அதை உங்களுக்கு கொடுத்திருக்கிறேன், அது உங்களுடையது. ஆனால் இப்பொழுது, நீங்கள்

அதற்குள் போகும் முன்பு, நீங்கள் ... (செய்ய) வேண்டியிருக்கிறது [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.]. நீங்கள் அதற்கு போகும் முன்பாக, எல்லா ஏவியர்களையும், எபூசியர்களையும், இந்த மற்ற எல்லா வித்தியாசமான 'இர்களையும்'... செய்தாக வேண்டியிருக்கிறது" என்றார்.

39. இப்பொழுது, அது வினோதமாக இருக்கிறது, இல்லையா? இப்பொழுது, இன்றைக்கும் ஜனங்கள் அதே காரியமாகத்தான் இருக்கிறார்கள். தேவன் தெய்வீக சுகமளித்தலுக்கான ஒரு வாக்குத்தத்தத்தை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவர் தெய்வீக ஆரோக்கியத்திற்கான ஒரு வாக்குத்தத்தத்தை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவர் உங்களுக்கு இந்த எல்லா வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருக்கிறார், ஆனால் அதிலிருந்து உங்களைத் தாக்கி, அகற்ற முயற்சித்துக் கொண்டிருக்கும் சத்துருவுக்கு முன்னே தைரியமாக எதிர்த்து நிற்பதற்கு நீங்கள் பயப்படுகிறீர்கள். அது முற்றிலும் சரியே.

தேவன், "நீங்கள் அவர்களுக்கு தலை வணங்கவும் கூட வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார். இங்கே பாருங்கள்.

**நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக.**

40. ஓ, என்னே. இதோ பாருங்கள், தெய்வீக சுகமளித்தலைக் குறித்து அதோ அங்கே வெளியே ஒரு வாக்குத்தத்தம் இருக்கிறது. அங்கே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்த ஒரு வாக்குத்தத்தமும் உள்ளது. நீங்கள் எப்பொழுதாவது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, நீங்கள் மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், கிறிஸ்தவ விஞ்ஞானம், மேலும் மற்ற எல்லாவற்றினூடாகவும் பாதையை ஏற்படுத்த வேண்டியிருக்கலாம். ஆனால் நீங்கள் போய் அதைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தால், அது அங்கே வெளியில் உங்களுக்காகத்தான் உள்ளது; தேவன் அதை வாக்குத்தத்தம் பண்ணி, அதை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார். ஆமென்.

“பார், நான் அதை உனக்குக் கொடுப்பேன், அந்தத் தேசம் அங்கேயுள்ளது. ஆனால் நீங்கள் அங்கு போய்ச் சேரும் முன்பு, நீங்கள் சண்டையிட்டாக வேண்டும்.” இன்று

ஜனங்களோடுள்ள காரியம் அதுதான், அவர்கள் நின்று சண்டையிட பயப்படுகிறார்கள். நமக்கு என்ன தேவை என்றால்...

*நான் அரசாள வேண்டுமானால், சண்டையிட்டாக வேண்டும்,*

*என் தைரியத்தை அதிகரியும், கர்த்தாவே.*

*பரிசைப் பெற்றிட மற்றவர் கடும்போரிட்டு,*

*இரத்தக் கடல்களின் வழியாக பயணம் செய்திருக்கும்போது,*

*ஓர் இலகுவான பூப்படுக்கையின் மேல்,*

*நான் பரலோக வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட*

*வேண்டுமோ?*

இல்லை, நான் அரசாள வேண்டுமானால், நான் சண்டையிட்டே ஆக வேண்டும். (அது சரியே.)

41. ஓ, நாம் மிகவும் முதுகெலும்பில்லாதவர்களாகவும், புழுக்களைப் போன்று எலும்பு இல்லாதவர்களாவும், பலவீனமுள்ளவர்களாகவும், தைரியம்

இல்லாதவர்களாகவும் இருக்கிறோம். பழங்கால பட்டி ராபின்சனைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். அவர் அந்த சோளவயலுக்கு இறங்கி சென்று, "கர்த்தாவே, நீர் எனக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுக்காவிட்டால், நீர் பூமிக்குத் திரும்பி வரும்போது, இங்கே ஒரு எலும்புக் குவியல் கிடப்பதைத் தான் கண்டுபிடிக்கப் போகிறீர்" என்றாராம்.

நாம் எப்பொழுதாவது அப்படிப்பட்ட உத்தமத்தைப் பெற்றிருப்போமானால், ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது. அவர், "கர்த்தாவே, என்னுடைய ஆத்துமாவின் இறுதி முனையில் (gable end) ஏராளமான அறிவை எனக்குத் தாரும். என்னுடைய வாயில் எனக்கு ஒரு பல்லாவது இருக்கும் வரையில், நான் பிசாசோடு சண்டையிடட்டும், அதற்குப் பிறகும், நான் மரிக்கும் வரைக்குமாக அவனை பல்லீறுகளைக் கொண்டாவது கடித்துக்கொண்டிருக்கட்டும் (gum)" என்று கூறினார். அதைத் தான் அவர் செய்தார்.

தைரியம் உடையவர்களாக இருந்து, அங்கே தொடர்ந்து எதிர்த்து நிற்கும்படியாக, தேவன் எனக்கும் உங்களுக்கும் உதவிசெய்வாராக. தேவன் அதை அவ்வண்ணமாகக் கூறியிருக்கிறார்,

மற்றவர்கள் அதைப் பெற்றுக்கொண்டேயிருக்கிறார்கள். நாமும் போய் அதைப் பெற்றுக்கொள்வோம். அது நம்முடையதாக இருக்கிறது. தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? "ஆனால் இதோ பாருங்கள், என்னுடைய சபை என்ன கூறும்? என்னுடைய மேய்ப்பர் என்ன சொல்லுவாரோ? இது என்ன சொல்லுமோ? என்னுடைய அம்மா என்ன சொல்லுவார்களோ? இது என்ன சொல்லுமோ?" அவர்கள் என்ன கூறினாலும் அது காரியமே அல்ல.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★